**தலைப்பு 171–மகளிர், சிறுவர் அலுவல்கள்மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 171 -மகளிர், சிறுவர் அலுவல்கள்மற்றும் சமூக வலுவூட்டல்அமைச்சின்2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள்மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வுச்சட்டத்தின்11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குவிரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன்08 ஆந் திகதி வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானமகளிர், சிறுவர் அலுவல்கள்மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020அரச நிதிச் சுற்றறிக்கையில் அரச துறையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் இலக்கம் 12 இன் (ஈ) பந்தியின் வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைப்பாடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அக்கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டு முதல் செயல்நடவடிக்கை திட்டத்துடன் கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டத்தையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேவைப்பாடுகள் முறையாக இனங் காணப்பட்டு அது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக 2022 ஆம் ஆண்டில் இரண்டு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங் களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்த நிதி ஏற்பாட்டில் இருந்து ரூபா 12,935,933,873 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | நலன்புரி நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்ட மானியங்களுக்காக மே ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் உரிய படிகள் செலவினம் உலக வங்கி மீள்நிரப்பியிருந்ததுடன் நவம்பர் படிகள் ADB மானியங்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை உயர்ந்த பட்சமாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தேவைப்பாடுகளை முறையாக இனங் கண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) முன்பள்ளி பிள்ளை பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்காக உலக வங்கியின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 189.5 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 144.4 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்ததுடன் 18 ஒப்பந்தங்களின் வேலைகள் நிறுத்தப்பட்டு இருந்தன. | கட்டிடப் பொருட்களின் விலை பாரிய அளவில் அதிகரித்தமையால் 18 ஒப்பந்தங்களின் வேலைகளை நிறுத்தியதால்சேமிப்புக்கு காரணமாக இருந்ததாக | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு உயர்ந்த பட்சமாக பயன்படுத்தப்பட வேண்டும் |
| (இ) அமைச்சினால் 7 மீண்டும் செலவினங்களுக்குரிய இறுதி காலாண்டின் போது நிதி பிரமாணம் 66 மாற்றலின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 57,890,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 41,657,227 | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார சீரழிவினால் எரிபொருள் விலை மிகவும் விரைவில் நாளுக்கு நாள் அதிகரித்ததன் பிரகாரம் | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை உயர்ந்த அளவில் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பயன்படுத்தப்படாமை காரணமாக 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்தது. | விலை விபரங்களை எதிர்வு கூறல் அடிப்படையில் தேவையான பற்றாக்குறை நிதி ஏற்பாடுகளுக்காக நி.பி 66 மூலம் மாற்றப்பட்டது அவ்வாறே ITMIS முறைமை ஊடாக நி.பி 66 மாற்றங்கள் செய்யப்பட வேண்டி இருந்ததால் ஆண்டின் இறுதி திகதி வரை இருக்காமல் இம்மாற்றல்களை மேற்கொண்டமையால் விலை அதிகரிப்பினை எதிர்பார்த்ததன் பேரில் மாற்றப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேலதிக நிதி ஏற்பாடாக ரூபா912,076,000 பெற்றுக் கொள்ளப்பட்டு அதில் ரூபா 145,835,161 ஆன நிதி ஏற்பாடு குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டு இருந்தது. | மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் நிதி நலனாலிகளுக்கு செலுத்தப்பட்ட போதும் வெவ்வேறு சிக்கல்களால் சேமிக்கப்பட்டதாக | தேவைப்பாடு ஒன்று இல்லாமல் குறைநிரப்புமதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யக்கூடாது. |
| (உ) | சிறுவர் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்காக யுனிசெப் அமைப்பிடமிருந்து 2022 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 12,076,000 தொகையில் ரூபா 8,976,267 தொகையைஉரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது | திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காமை காரணமாக குறித்த செலவினம் மேற்கொள்ளப்படவில்லை என்பதாக | கிடைத்த கட்டுநிதியை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்த வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி குழுக்கள் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்குஒரு முறை நடத்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டில் கூட்டங்கள் 15 மாவட்டங்களிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளின் கூட்டங்கள் 19 மாவட்டங்களிலும் நான்காவது காலாண்டின் கூட்டங்கள்21 மாவட்டங்களிலும் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கவில்லை.இக்கூட்டங்களை நடாத்துவதற்காக 25 மாவட்டங்களுக்காக வருடாந்தம்ரூபா 930,800 ஆன நிதிய | எதிர்காலத்தில் மாவட்ட செயலகங்களிலிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டதன்பேரில் கூட்டங்கள் நடத்தப்பட்டதை அறிக்கைஇடுவதற்கு குறித்து கொண்டுள்ளதாக | குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் குழுக் கூட்டங்களைநடத்துவதற்கும் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டு இருந்தது. | | |
| (ஆ) | 1938 தொலைபேசி சேவை செயற்படுத்தப்படுவது தொடர்பாக செயற்பாட்டுக் குழு ஒன்றின் மூலம் கண்காணித்தல் மற்றும் வழிநடத்தல் மேற்கொள்வதாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் செயற்பாட்டு குழு மேற்பார்வை மற்றும் வழிநடத்தல் துணை குழுக் கூட்டம் 2020 ஜூலை 30 ஆந் திகதியின் பின்னர் நடத்தப்பட்டு இருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக செயற்பாட்டு குழு ஒழிக்கப்பட்டதுடன் புதிய நியமனம் மேற்கொள்ளப்படாததாலும் செயற்பாட்டு குழு மேற்பார்வையொன்று இடம்பெறாதிருந்ததுடன் செயற்பாட்டு துணைக் குழுவும் செயல்படவில்லை என்பதாக. | செயற்பாட்டு குழு மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு துணை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் |

### 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின்செயற்திட்டத்தின் பிரகாரம் மகளிர் முயற்சியாளார்களுக்காக டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மேடைகளை (E - Pola) நிறுவுவதற்காக 2022 ஆண்டின் இறுதிவரையில் ரூபா 4,440,423 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டு இருந்தது. எனினும் இம்முறைமையில் 143 பெண்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் விற்பனை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் இறுதிவரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் திட்டத்தின் ஆரம்ப நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது. | தற்போது பிரதிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவி வெற்றிடமாக காணப்படுவதால் இந்த Lanka Women e – market முறைமை தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு எவரும் இல்லை என்பதாகவும் Lanka Women e – market முறைமை முறையாக காணப்பட்ட போதும் முயற்சியாளர்களான மகளிர்களின் தகவல்கள் தொழில்நுட்ப முறைகள் குறைவு காரணமாக அவர்கள் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முறைமையே பயன்படுத்துவதில்அக்கரை இல்லாமல் உள்ளதாக | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக வங்கி மானியங்களின் கீழ் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டு வந்த முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ்ரூபா 37,329,454 பெறுமதியான 20முன்பள்ளி பிள்ளை அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் வருடாந்த மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,895 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் குறித்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருநந்த இந்த முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்கள் நிர்மாணிப்பதை இரத்து செய்வதற்கு 2022 ஆம் ஆண்டில் கட்டிடங்கள், எழுதுகருவிகளின் விலை விரைவாக பாரியளவில் அதிகரித்தமை, மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் உருவான போக்குவரத்து சிரமங்கள் காரணமாக ஒப்பந்தக்காரர்களால் எதிர்பாராதவகையில் வேலைகளை நிறுத்தி இருந்தனமை காரணமாகும். அச்சிக்கல்கள் உருவாகவிட்டால் திட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் அந்நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு இயலுமை இருந்ததாக | திட்டத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக வலுவூட்டல் அமைச்சுக்குரிய ரூபா 35,000,000 பெறுமதியான பென்ஸ் வகையிலான வண்டி அமைச்சில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் வண்டி 2022 ஜூலை 12 ஆம் திகதி முதல் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையில் 08 மாத காலம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றவகையில் காணப்பட்டது. | இவ்வண்டி கௌரவ அமைச்சருக்காக ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்றாகவும் இந்த அமைச்சின் அமைச்சரவை அமைச்சர் கௌரவ ஜனாதிபதியாக இருப்பதால் இவ்வாகனத்தை அமைச்சருக்கு வழங்கும் தேவைப்பாடு ஏற்படவில்லை என்பதாக இவ்வண்டி செயலாளரின் உத்தியோபூர்வ வாகனமாக தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களை உயர்ந்த செயற்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கிராம சக்தி பணியகம், சௌபாக்க பணியகமாக திருத்தம் செய்யும் போது கிராம சக்தி பணியகத்திற்கு சொந்தமான 21 உருப்படிகளுக்குரிய 60 பொருள் அலகுகள் சௌபாக்கிய பணியகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிராமசக்தி அலுவலகத்துக்குரிய குறித்த பொருட்கள் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கு கையேற்கப்பட்டதுடன் குறித்த கடிதங்களில் சில உருப்டிகள் இந்த அமைச்சிற்கு கிடைக்கவில்லை என்பதாக | சொத்துக்களை சரியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சில் பிணை வைக்க வைக்க வேண்டிய 13உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களைபெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பரஸ்பர பிணைச் சங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பிணைத்தொகையை கட்டுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 செப்டம்பர் 24 ஆம் திகதி விபத்துக்குட்பட்ட வாகனம் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் திருத்தம் | திடீர் விபத்து தொடர்பாக காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகவல்கள் காப்புறுதி | வாகன விபத்து தொடர்பாக தாமதம் இன்றி உரிய நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை விபத்து நடந்து 2 வருடங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி இழப்பீட்டிற்காக 06 வருடங்களுக்குப் பின்னர் அதாவது 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதி விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளன. 2023.04.10 ஆந் திகதி காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் ஒருமுறை குறித்த தகவல்களுடன் மேன்முறையீடு ஒன்று காப்புறுதி கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | மேற்கொண்டு காப்புறுதி இழப்பீட்டை முறைப்படி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 யூன் 08 ஆந் திகதி நீரில் அடித்துச் செல்லப்பட்டு விபத்துக்குட்பட்ட Land Cruiiser Jeep வண்டியினைத் திருத்தத்துவதற்காக ரூபா 6,817,698 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் அதில் காப்புறுதி கம்பனியால் செலுத்தப்படாத ரூபா 3,450,945 தொகையை நிதிப்பிரமாணம் 104(4) அறிக்கையின் பிரகாரம் சாரதியிடம் அறவிடுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அத்தொகையை அமைச்சினால் 2021 திசெம்பர் மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக அரசிற்கு ரூபா 3,450,945 ஆன நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு அளவில் வண்டியின் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் நிலுவையான ரூபா 3,450,950 தொகை கொடுப்பனவு செய்யாத காரணத்தினால் வண்டி நீண்ட காலமாக கராஜில் நிறுத்தி வைக்க நேர்ந்தது.அதன் பிரகாரம் அடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் காப்புறுதி கம்பனிக்கு மீண்டும் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பில் அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | வாகன விபத்து தொடர்பாக தாமதம் இன்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு காப்புறுதி இழப்பீட்டை முறைப்படி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 மே 09 ஆம் திகதி பயன்படுத்த முடியாத வகையில் தீக்கிரையாக்கப்பட்ட மோட்டார் வண்டிக்கு ஏற்பட்ட நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழான இறுதி அறிக்கையின் பிரகாரம் காப்புறுதி கம்பனியிடம் இருந்து ரூபா 16,500,000 அறவிட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2023 மே 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | அந்த நட்டஈட்டை மேற்கொள்வதற்குரிய ரூபா 16,500,000 பெறுமதியை கொடுப்பனவு செய்து 845063 ஆம் இலக்க காசோலை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டது. காசோலையில் குறிப்பிட்ட பெயரை திருத்தம் செய்வதற் காக மீண்டும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் பெயர் திருத்தப்பட்ட காசோலை இதுவரை கிடைக்கவில்லை என. | வாகன விபத்து தொடர்பாக தாமதம் இன்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு காப்புறுதி இழப்பீட்டை முறைப்படி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2015 மார்ச் 10 ஆம் திகதி விபத்துக்குட்பட்ட ஜீப் வண்டியை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக ரூபா 8,505,997 ஆன திருத்த மதிப்பீடு ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி கம்பனி ஜீப் வண்டியின் உரித்தை கையேற்று ரூபா 4.5 மில்லியனை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. 2022 மார்ச் 9 ஆம் தேதி காப்புறுதி கம்பனியின் கடிதத்தின் பிரகாரம் அப்போது கம்பனிக்கு வாகனத்தை கையேற்பதற்கு தாமதக் கட்டணமாக 5 சதவீத தண்ட பணத்தை அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் இணங்கப்பட்ட தொகையில் 7 சதவீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டு ரூபா 4,193,050 தொகையை மாத்திரம் அமைச்சுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது இடம் பெற்ற சேதம் / நட்டம் நிதிப்பிரமாணம் 105(இ) பிரகாரம் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் வாகனத்தை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு செலவாகும் தொகைக்கு சமமான பெறுமதி ஒன்றை காப்புறுதி இழப்பீடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை கணக்காய்வின் போது சிக்கலான விடயமாக இருந்தது. | வண்டியின் திருத்த செலவினம் உயர்ந்த பெறுமதியாக இருப்பதால் காப்புறுதி கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டு சந்தர்ப்பங்கள் 2 இல் பழுதடைந்த வண்டியை காப்புறுதி கம்பனிக்கு கையளித்து ரூபா 4,500,000 தொகையை அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்கு அரச நிதிப் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டது. | வாகன விபத்து தொடர்பாக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்து முறையாக காப்புறுதி இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தாமதத்துக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் இனங் காணப்பட்டு தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்தை செயற்படுத்துவதன் செயன் முன்னேற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் குழுவிற்கு சரியான, கால ரீதியான தரவுகள் மற்றும் அறிக்கைகள் உரிய நிறுவனத்திற்கு வழங்கும் நோக்கில் UNCRC(United Nation Convention on the Rights Of the Child) தரவு முறைமை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தரவுமுறைமையை தயாரிப்பதற்கும் அதன் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக ரூபா 2,350,000 செலவிடப்பட்டு தரவு முறை அபிவிருத்தி செய்யப்பட்டு நன்னடத்தைத் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2023 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை இந்த தரவு முறைமை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டதுடன் எதிர்பார்த்த நோக்கமும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த தரவுகள் முறைமையில் தரவுகள் உள்ளடக்கப்படுவது மற்றும் தரவுகளை அமுலாக்குவது தொடர்பாக உரிய அமைச்சின் தரவு அங்கீகரிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்த்திச்திட்டங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த தரவு முறைமை இதுவரை தேவைப்பட்ட பிரகாரம் பயன்படுத்த முடியாமல் இருப்பதாக | தேவைப்பாடு இனங்காணப்பட்டு தரவுமுறைமையை பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்பட வேண்டும் |